தரம் 11

தவணை ஒன்று

அலகு 02

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## நிறுத்தக்குறிகள்

Mr.S.Thangaruban
J/Jaffna Hindu College

தலைப்பு 1 : தமிழ்மொழியும் இலக்கியமும்

அலகு 1.1 : தமிழில் சிறுவர் இலக்கியம்

உள்ளடக்கம் : நிறுத்தக் குறியீடுகள்

# நிறுத்தக்குறி என்றால் என்ன

- எழுத்து மூலம் கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதற்குத் துணையாக நிறுத்தக் குறிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- பேசும் போது ஒருவர் தமது குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும், தாமதித்தும், நிறுத்தியும் கருத்துக்களை தெளிவாகப் புகட்ட முடியும்.
- எழுத்தில் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு இக்குறியீடுகள் துணை நிற்கின்றன.

# நிறுத்தக்குறி என்றால் என்ன

- ❖ சொற்களுக்கு இடையில் இடைவெளியில்லாமல் பந்தி பிரிக்காமலும் குறியீடுகள் இல்லாமலும் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் விடயங்களை வாசித்துக் கொண்டு செல்கையில் கண்கள் சலிப்படைந்து விடும்

# நிறுத்தக்குறி என்றால் என்ன

கண்களுக்கு ஆறுதல் தரவும் கருத்துற நோக்கவும் சொற்களுக்கு இடையே இடைவெளிகளும் நிறுத்தக் குறியீடுகளும் தவிர்க்க முடியாது வேண்டப்படுகின்றன.

எழுதுதல், எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் இடையில் ஏற்றஇடைவெளிஎழுத்தைத் தொடங்க வேண்டிய இடத்தில் தொடங்கி முடித்தல், உறுப்புமைய விட்டு எழுதுதல், நிறுத்தக் குறியீடுகளை ஏற்றஇடத்தில் கையாளுதல் அவசியமாகும்.

## நிறுத்தக் குறிகளின் வகைகள்

1. முற்றுப்புள்ளி அல்லது முடிப்பிசைக்குறி
2. வினாக்குறி அல்லது வினாவிசைக்குறி
3. வியப்புக்குறி அல்லது மெய்ப்பாட்டுக்குறி
4. காற்புள்ளி அல்லது உறுப்பிசைக்குறி
5. முக்காற்புள்ளி அல்லது விளக்கிசைக்குறி

## நிறுத்தக் குறிகளின் வகைகள்

6. அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி
7. சிறுகோடு அல்லது விட்டிசைக்குறி
8. தனி நிலைத் தொடர்
9. அடைப்புக்குறி
10. மேற்கோட்குறி அல்லது அனுவாதக்குறி

முதலில் நிறுத்தக் குறியீடுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளல் வேண்டும்.

## முற்றுப்புள்ளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- கூற்று வாக்கியம் (செப்புவாக்கியம்), வியங்கோள் வாக்கியம், ஏவல்வாக்கியம் ஆகியவற்றின் இறுதியிலும் பயன்படுத்தப்படும்
- ஒருவிடயத்தைச் சுருக்கமாகக் கூறும் போது
- கடிதத்தின் முகவரி இறுதியிலும் திகதி இறுதியிலும்

## 1. வினாக்குறி அல்லது வினாவிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்

- நேர் கூற்று வாக்கியங்களின் இறுதியில்
- அயற்கூற்று வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி வராது
- ஐயத்துக்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் அடைப்புக் குறிக்குள் இடம்பெறும்

## வியப்புக்குறி அல்லது மெய்ப்பாட்டுக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

பல்வேறு விதமான மன உணர்ச்சிகளை வெளிக்காட்ட இக்குறி பயன்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ➢ புதுமை | கோபம் | மகிழ்ச்சி |
| ➢ இரக்கம் | துக்கம் | வெறுப்பு |
| ➢ பயம் | விருப்பம் | நோ |
| ➢ துன்பம் | அருவருப்பு | |

போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற இடைச்சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் பின்னர்

## காற்புள்ளி அல்லது உறுப்பிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- ✓வாக்கியத்தின் எழுவாய் நெடுந்தொடராக இருப்பினும், பயனிலைக்குத் தொலைவில் இருப்பினும் அந்த எழுவாய்க்குப் பின் பயன்படுத்தப்படும்

- ✓வாக்கியங்களிலே விளக்கத்திற்காக வரும் இடை பிற வைப்பைப் பிரித்துக் காட்டுவதற்கு காற்புள்ளி முன்னும் பின்னும் இடம்பெறும்

- ✓தொடராக வருகின்ற சொற்களையும், துணைவாக்கியங்களையும் பொருள் விளங்கும் வண்ணம் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும்.

## காற்புள்ளி அல்லது உறுப்பிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- ✓ஒருவரை அல்லது ஒன்றை விளித்துக் கூறுமிடத்து விளிப்பெயரை அடுத்து காற்புள்ளி இடப்படும்
- ✓வாக்கிய இணைப்பிடைச் சொற்களை அடுத்து இடம்பெறும்
- ✓ஒருவரின் கூற்று வாக்கியங்களை அப்படியே எழுதும் போது கூற்றுக்கு முன் இடப்படும்

## காற்புள்ளி அல்லது உறுப்பிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- ✓ ஆம், இல்லை என்ற சொற்களோடு வாக்கியம் ஆரம்பிக்கும் போது காற்புள்ளி இடப்படும்

- ✓ கடிதம் எழுதும் போது விளிப்புக்குப் பின்னும், ஒப்பமிட முன்னும் முகவரி எழுதும் போதும், பெயர் முகவரி ஆகியவற்றின் பின்னும் காற்புள்ளி இடப்படும்

## முக்காற்புள்ளி அல்லது விளக்கிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று அதன் விளக்கமாக அமையுமிடத்து முக்காற்புள்ளி இடப்படும்
- ஒரு பட்டியலை அறிவிப்பதற்கு முன்னர் முக்காற்புள்ளி இடப்படும்
- அவையாவன, உதாரணமாக, வருமாறு போன்ற தொடர்களுக்குப் பின்னாலும் முக்காற்புள்ளி இடப்படும்
- நீளமான மேற்கோட்பகுதியொன்றை அறிமுகம் செய்வதற்கு முக்காற்புள்ளி இடப்படும்

**அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்**

- ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டமையும் போது ஒவ்வொரு பயனிலையின் பின்னும் அரைப்புள்ளி பயன்படுத்தப்படும்
- உட்தொடர்கள் இணைப்பதற்கு அரைப்புள்ளி பயன்படுத்தப்படும்

## சிறுகோடு அல்லது விட்டிசைக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- ✓ திடீரெனக் கருத்து மாற்றத்தைக் காட்டுவதற்கு விட்டிசைக் குறி பயன்படுத்தப்படும்
- ✓ வேறு வேறாகக் கூட்டப்பட்ட பொருள்களைத் தொகுத்துக் கூறுவதற்கு விட்டிசைக் குறி பயன்படுத்தப்படும்
- ✓ சொற் சுருக்கத்தின் போது இக்குறி பயன்படுத்தப்படும்

## தனி நிலைத் தொடர் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- தயங்கித் தயங்கிப் பேசுவதைக் காட்டல்
- உணர்ச்சிக் குழப்பத்தைக் காட்டுவதற்கு

## அடைப்புக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- ✓ சான்றாதாரம்
- ✓ வரைவிலக்கணம்
- ✓ விளக்கம்
- ✓ மொழிபெயர்ப்பு போன்றவற்றுக்கு

## மேற்கோட்குறி அல்லது அனுவாதக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

1. ஒருவருடைய கூற்றை அப்படியே மேற்கொண்டு எடுத்தாளும் போது மேற்கோட்குறி பயன்படுத்தப்படும்
2. புத்தகம், சஞ்சிகை, கட்டுரை முதலியனவற்றை பெயர் சுட்டிக் குறிப்படும் போது

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**வினா இல:1**

**என்னுடைய சாதகத்தில் கம்பியூட்டர் தத்து இருப்பதாக சுதுமலை சாத்தியார் கூறினார் . கம்பியூட்டர் தத்து என்ற தொடருக்கு இடம்பெற வேண்டிய குறியீடு யாது**

1. **விட்டிசைக்குறி**
2. **ஒற்றைமேற்கோள்**
3. தனிநிலைத்தொடர்குறி
4. உறுப்பிசைக்குறி

**விடை**

**2. ஒற்றைமேற்கோள்**

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**வினா இல:2**

**சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்**
**சாதகங்கள் புரட்டுவர்** **இங்கு இடம்பெற வேண்டிய குறியீடு யாது**

1. **அரைப்புள்ளி**
2. **சிறுகோடு**
3. ஒற்றைமேற்கோட்குறி
4. **விட்டிசைக்குறி**

**விடை**

**2. அரைப்புள்ளி**

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**வினா இல: 3**

**எமிரோ வோரி என்பாள்**
**எந்துண்டி வஸ்தி என்பாள். இப்பகுதியில் இடம்பெறவேண்டிய குறியீடு யாது**

1. **விளக்கிசைக்குறி**
2. **முற்றுப்புள்ளி**
3. **வியப்புக்குறி**
4. **இரட்டை மேற்கோட்குறி**

**விடை**

**2. இரட்டை மேற்கோட்குறி**

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**வினா இல: 4**

**பேதை பெருஞ் செல்வம் உற்றக் கடை அறிவிலி பெரும் செல்லத்தைப் பெற்றால் இக்குறட்பாவின் முடிவிடத்தில் இடம்பெறவேண்டிய குறியீடு யாது**

1. அரைப்புள்ளி

3.வினாக்குறி

3. சிறுகோடு

4. மெய்ப்பாட்டுக்குறி

**விடை**

**3. சிறுகோடு**

## பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**வினா இல: 5**

**புலவர்மணி ஏ.பெரிய தம்பிப்பிள்ளை (1899 - 1978 ) இப்பகுதியில் இடம்பெற்ற குறியீடுகள் முறையே**

1. **முற்றுப்புள்ளி, அடைப்புக்குறி, விட்டிசைக்குறி**
3. **வினாக்குறி, முற்றுப்புள்ளி, காற்புள்ளி**
3. **சிறுகோடு, அடைப்புக்குறி, முற்றுப்புள்ளி**
4. **மெய்ப்பாட்டுக்குறி, அடைப்புக்குறி, வியப்புக்குறி**

**விடை**

**1. முற்றுப்புள்ளி, அடைப்புக்குறி, விட்டிசைக்குறி**

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

வினா இல : 6

நூலகம் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றது : நூல்கள் செல்லரித்து நாசமாகி விட்டன. இங்கு : இடம்பெற்ற குறியீடு யாது

1 அரைப்புள்ளி

3. தொடரிசைக் குறி

3. சிறுகோடு

4. முக்காற் புள்ளி

விடை

4. முக்காற் புள்ளி

**பின்வரும் வாக்கியத்தில் குறியீடுகள் ஒழுங்குற அமைய வேண்டிய தொகுதியைத் கொண்ட தெரிவு செய்க**

வினா இல : 1

அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தபால் தந்திக் கட்டுக்களை என்றார் நாவலர்

| | | |
|---|---|---|
| “ ” | , | . |
| . | , | ! |
| ! | “ ” | , |

**பின்வரும் வாக்கியத்தில் குறியீடுகள் ஒழுங்குற அமைய வேண்டிய தொகுதியைத் கொண்ட தெரிவு செய்க**

வினா இல : 2

ஒலி காட்சிப் படிமத்திற்கு துணை போவதற்கு ஒரு எடுத்துக்காட்டு பாரதி ராஜாவின் கல்லுக்குள் ஈரம்

| | | |
|---|---|---|
| , | " " | . |
| . | , | ! |
| , | : | . |

**பின்வரும் வாக்கியத்தில் குறியீடுகள் ஒழுங்குற அமைய வேண்டிய தொகுதியைத் கொண்ட தெரிவு செய்க**

வினா இல : 3

மரியாதை கருதி சிறுநீர் பெய்து கொண்டு பிடிப்பதற்கா என்பதைக் கேட்கவில்லை என்று நினைக்கின்றேன்

| | | |
|---|---|---|
| “ ” | , | ; |
| ( ) | , | . |
| — | “ ” | , |

**பின்வரும் வாக்கியத்தில் குறியீடுகள் ஒழுங்குற அமைய வேண்டிய தொகுதியைத் கொண்ட தெரிவு செய்க**

வினா இல : 4

குமணனும் கன்னனும் ஆகிய இவர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் அறிவர் ஒருமை மனமில்லாத வேறு யாரறிவர்

| | | |
|---|---|---|
| . | ? | ; |
| ( ) | ? | . |
| , | ; | ? |

**பின்வரும் வாக்கியத்தில் குறியீடுகள் ஒழுங்குற அமைய வேண்டிய தொகுதியைத் கொண்ட தெரிவு செய்க**

வினா இல : 5

ஆனால், இந்த மலைப் பூக்களின் மணம் பறவைகளின் ஒலி


, ... .

; ? .

, ; ?

## தொடர்புபடுத்தல்

| | | |
|---|---|---|
| 1 | உறுப்பிசைக்குறி | ; |
| 2 | விட்டிசைக்குறி | ( ) |
| 3 | முடிப்பிசைக்குறி | , |
| 4 | தொடரிசைக்குறி | — |
| 5 | அடைப்புக்குறி | . |



## தொடர்புபடுத்தல்

1 வியப்புக்குறி

2 அனுவாதக்குறி

3 வினாவிசைக்குறி

4 விளக்கிசைக்குறி

5 தனி நிலைத் தொடர்

:

ʼ ˌ ʼ ˌ ˌ ˌ ˌ ʼ

!

" "

?

**பின்வரும் கூற்றுச் சரியாயின் சரி ( ✓ )எனவும் பிழையாயின் பிழை ( ✕ ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 1

தயங்கித் தயங்கிப் பேசுவதற்கு தனிநிலைத்தொடர் பயன்படுத்தப்படும்

✓

✕

பின்வரும் கூற்றுசச் சரியாயின் சரி ( ✓ )எனவும்
பிழையாயின் பிழை ( ✗ ) எனவும் தெரிவு செய்தல்

வினா இல : 2

ஒருவரின் நேர்கூற்று வாக்கியங்களை அப்படியே எழுதும் போது அரைப் புள்ளி பயன்படுத்தப்படும்

✓

✗

**பின்வரும் கூற்றுச் சரியாயின் சரி ( ✓ )எனவும் பிழையாயின் பிழை ( ✗ ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 3

புத்தகம், சஞ்சிகை, கட்டுரை முதலியனவற்றைப் பெயர் சுட்டிக் குறிப்படும் போது அனுவாதக் குறி பயன்படுத்தப்படும்

✓

✗

**பின்வரும் கூற்றுச் சரியாயின் சரி ( ✓ )எனவும்
பிழையாயின் பிழை ( X ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 4

ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டமையும் போது ஒவ்வொரு பயனிலையின் பின்னும் அரைப்புள்ளி பயன்படுத்தப்படும்

✓

X

**பின்வரும் கூற்றுசச் சரியாயின் சரி ( ✓ )எனவும்
பிழையாயின் பிழை ( ✗ ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 5

ஐயத்துக்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் அடைப்புக்குறிக்குள் வியப்புக்குறி பயன்படுத்தப்படும்

✓

✗

**பின்வரும் கூற்றுச் சரியாயின் சரி ( ✓ )எனவும் பிழையாயின் பிழை ( ✗ ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 6

சான்றாதாரம், விரைவிலக்கணம், விளக்கம் போன்றவற்றின் பின்பு அனுவாதக்குறி பயன்படுத்தப்படும்

✓

✗

**பின்வரும் கூற்றுச் சரியாயின் சரி ( ✓ )எனவும் பிழையாயின் பிழை ( X ) எனவும் தெரிவு செய்தல்**

வினா இல : 7

பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று அதன் விளக்கமாக அமையுமிடத்து முக்காற்புள்ளி இடப்படும்

✓

X

# நன்றி